## நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம்: ஒரு ட்ரோஜான் குதிரை

2023 ஆம் ஆண்டு, செப்டெம்பர், 18ஆம் திகதியன்று, இலங்கை அரசாங்கம் “நிகழ்நிலைக் காப்பு” எனும் தலைப்பிலான ஒரு சட்டமூலத்தைப் பிரசுரித்தது, இது பின்னர் ஒக்டோபர் 3ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. தெளிவற்ற விதத்தில் வரையறை செய்யப்பட்ட “தடைசெய்யப்பட்ட கூற்றுகளை” நிகழ்நிலைத் தளங்களிலிருந்து நீக்குவதற்கு ஆட்களை மற்றும் இணைய சேவை வழங்குபவர்களைப் பணிக்கும் திறன் உட்பட, பல்விதமான அதிகாரங்களுடன் ஒரு நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவை தாபிப்பதற்கு சட்டமூலம் நோக்கம் கொள்கிறது. விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கம் சட்டமூலத்தைச் சட்டமாக மாற்றுவதற்கு வெளிப்படையாகவே தீர்மானித்துள்ள நிலையில், பேச்சு மற்றும் மாற்றுக் கருத்துகளுக்கான சுதந்திரம் என்பவற்றுக்கான தாக்கங்களோடு இலங்கையில் நிகழ்நிலை வெளி, கண்காணிக்கப் படுவதின் பாதிப்புகளை ஒருவர் வினவுதல் வேண்டும். குறிப்பாக, இந்த நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தேசிய பாதுகாப்பைக் குழப்புவதற்கு அல்லது பொது ஒழுங்கு அல்லது “குரோதம்” அல்லது வெவ்வேறு வகுப்பு ஆட்களிடையே “விரோதத்தை” ஏற்படுத்தும் பொருட்டு அச்சுறுத்துவோரை சிறையிடுவதற்கும் மற்றும்.'.அல்லது அபராதம் விதிப்பதற்கும் முனைகிறது. மேலும், அடிப்படை உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்கு பரந்த தாக்கங்களைக் கொண்டிருக்க முடியுமான “மத உணர்வுகளைச் சீண்டிவிடுமான” நிகழ்நிலைத் தொடர்பாடல்களை அல்லது பொதுமக்களுக்கு “எச்சரிக்கை” அல்லது “அச்சம்” ஏற்படுத்தும் கூற்றுக்களைத் தடை செய்வதற்கான உறுப்புரைகளும் இச்சட்டமூலத்தில் இருக்கின்றன. மறுபுறத்தில், சட்டமூலத்தை ஆதரிப்பவர்கள், அது சிறுவர் ஆபாசங்களை எதிர்த்துப் போராடுவதற்கு முனைகின்றதாக பாராட்டுகின்றனர். எனினும், இந்தத் தவறுகள் அல்லது குற்றங்கள், ஏற்கனவே இருக்கின்ற சட்டங்களில் ஏற்பாடளிக்கப்பட்டும், சட்டமூலத்தின் ஒரு சிறிய பகுதியாக நிகழ்நிலையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் முகங்கொடுக்கும் துஷ்பிரயோகங்களிற்கு குறைபாடு உடையவையாக உள்ளன.

சிவில் சமூகமும் ஏனையவர்களும் இச்சட்டமூலத்தை விமர்சித்துள்ளதுடன், 45 மனுக்கள் இச்சட்டமூலத்திற்கு எதிராக இலங்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, இலங்கை அரசியலமைப்பில் அடங்கியுள்ள பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை குறித்த சட்டமூலம் மீறியுள்ளதாகவும், மக்களின் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலமே அது நிறைவேற்றப்பட முடியுமென அவை வாதிட்டன. 2023 ஆம் ஆண்டு, நவம்பர், 7ஆம் திகதி, உயர் நீதிமன்றம், பகிரங்கமாக பிரசுரிக்கப்பட்ட சட்டமூலத்தின் நோக்கத்தைக் கணிசமான அளவில் மாற்றி, குறித்த சட்டமூலத்திற்கு 31 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே அது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட முடியுமெனத் தீர்மானித்தது.

இது தவிர, பொதுப் பாதுகாப்பு அமைச்சர் குறித்த சட்டமூலம் மீளப் பெறப்பட்டு மற்றும் திருத்தப்பட்ட ஒரு வடிவம் மீள் சமர்ப்பிக்கப்படுமென வாக்குறுதி அளித்திருந்த போதிலும், சட்டமூலம் 2024ஆம், ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி வாசிப்பிற்காக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. சட்டம் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாக்கிறது மற்றும் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு தேவையான பாதுகாப்புகளைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவது தொடர்பில் பொதுமக்கள் மற்றும் ஏனையவர்களுடன் ஈடுபடுவதற்கு அரசாங்கத்தால் நேர்மையான ஆர்வமின்மை நீடிக்கும் சமயத்தில், இது பல கரிசனைகளுடன் தொடர்கிறது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்ட நேரம் முக்கியமானதாகும். 2023இன் கடந்த சில மாதங்களுக்கும் மேலாக, இலங்கை அரசாங்கம், நிகழ்நிலைக் காப்புச் சட்டத்திற்கு மேலதிகமாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றீடு செய்வதற்கு சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஒளி, ஒலிபரப்பாளர்களின் விடயதானங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஓர் ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரச் சட்டமூலம் என்பவற்றின் அமுல்படுத்தலைப் பிரேரித்திருந்தது. எனவே, ஜனநாயகம் மீதான ஒரு எதிர்மறைப் பாதிப்புகளுடன் சிந்தனை மற்றும் கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நிகழ்நிலைக் காப்புச் சட்டம் இணையத் தளச்சட்டத்தின் ஒரு பரந்த பரப்பிற்குள் எளிதாகப் பொருந்துகிறது.

மேற் குறிப்பிட்ட கரிசனைகள் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வின்மை இல்லாதிருக்கும் ஒரு சூழலில் உள்ளவையாக இருக்கின்றன. நவெம்பரில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் நடத்தப்பட்ட ஒரு கருத்துக் கணிப்பில், இலங்கையின் பொதுமக்களில் 28.4% ஆனவர்கள் மட்டுமே உத்தேசிக்கப்பட்ட நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் பற்றி அறிந்திருந்தார்களெனவும் அதில் 71.1% எண்ணிக்கையானவர்கள் அதிகாரத்திலுள்ளவர்கள் இச்சட்டத்தை தங்களது நன்மைக்காக உபயோகிப்பர் என்பதைச் சுட்டிக் காட்டி சட்டமூலத்தை ஏற்க மறுத்தனர். இந்தச் சட்டமூலம் வெளியிடப்படுவதற்கு முன்னம் பங்குதாரர் கலந்தாலோசித்தல் இல்லாமையின் ஒரு மாதிரியைப் பின்பற்றுகின்றதுடன் திறனாய்வாளார்கள், சிறுபான்மையினர் மற்றும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயம் போன்ற ஏனையவற்றைக் குறிவைப்பதற்கு சட்டங்களைப் பாவிக்கும் இலங்கையின் சூழ்நியையில் வைத்து நோக்கப்படல் வேண்டும். இலங்கையின் 71.6% ஆன மக்கட்தொகை அறிந்திராத சட்டமூலத்துடன், பேச்சுச் சுதந்திரத்திற்கான அவர்களது அடிப்படை உரிமையைப் படிப்படியாக இல்லாதழிக்கும் முன்னெடுப்புகளுக்கு மக்களின் ஒரு பெரும்பான்மையானவர்கள் அறிந்திராமல் இருப்பதற்கு ஒரு தெளிவான அறிகுறி இருக்கின்றது.

இச்சட்டமூலம் பாராளுமன்றத்தால் சட்டமாக இயற்றப்படின், பாதுகாப்பான நிகழ்நிலை வெளிகளை அளிப்பது என்ற தோற்றத்தின் கீழ் பொய்த்தோற்றம் காண்பித்துக் கொண்டு, ஆனால் உண்மையில் விமர்சனம் செய்யும் பொது அபிப்பிராயத்தை தணிக்கை செய்வதற்கும் மற்றும் மாற்று அரசியல் குரல்களின் எதிர்ப்பை நசுக்குவதற்கும் 'நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவுக்கு'' அதிகாரமளிக்கும் ஓர் ஒழுங்குமுறைப்படுத்தாத சட்டத்துடனேயே பொதுமக்கள் விட்டுவைக்கப்படுவர். அவ்வாறான ஓர் அச்சம் நிறைந்த எதிர்பார்ப்பு கொண்ட எதிர்காலம் வரமாட்டாது என்பது, இப்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதே தங்கியுள்ளது.